செ.வெ. எண்: 11. நாள்: 03.03.2021

# பத்திரிக்கை செய்தி

எச்1/24207/2020
நாள்: 03.03.2021

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விழுப்புரம்.

2021-தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 06.04.2021 அன்று நடைபெறவுள்ளது தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. தேர்தல் நன்னடத்தை விதிமீறலை கண்காணிப்பதற்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தனியே தேர்தல் கட்டுப்பாட்டு அறை துவங்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் Toll Free Number 1800 425 7768 ஆகும். இந்தக் கட்டுப்பாட்டு அறையில் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பணிபுரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்கள் உடனுக்குடன் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் 24 மணிநேரமும் இயங்கி கொண்டிருக்கும் பறக்கும் படையினருக்கு தெரிவிக்கப்பட்டு புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் நன்னடத்தை விதிகளில் விதிமீறல் ஏதுமிருப்பின் பொதுமக்கள் மேற்படி தொலைபேசி எண்ணை தொடர்புக் கொண்டு தங்களது புகார்களை தெரிவித்து கொள்ளலாம் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

ஓம்/-ஆ.அண்ணாதுரை,
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

உ.ந.உ.ப//
03/03/21
For, தனி வட்டாட்சியர்(தேர்தல்)

3/3/21

வெளியீடு: செ.ம.தொ.அ. விழுப்புரம்